மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்.)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. தீர்மானம்.

### விதிகள் 36 மற்றும் 37-ஐத் தளர்த்துதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவரின் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் 36 மற்றும் 37 ஆகியவற்றைத் தளர்த்தி, மேற்படி விதிகளில் விதி 95-ன் கீழ் ஓர் அரசினர் தனித் தீர்மானம் கொண்டுவர அனுமதி அளிக்க வேண்டும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

8. தனித் தீர்மானம்

சென்னைத் தொலைக்காட்சி நிலையம் இரவு 9 மணிவரை தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்பவும் மாநில மொழிக்கு மாநிலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த இருமொழிக் கொள்கையில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுதும் உறுதியாக உள்ளது. தொடர்ந்து இக்கொள்கையில் உறுதியோடு இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மாநில ஆட்சிமொழியாகவும், ஆங்கிலம் அகில இந்திய தொடர்பு மொழியாகவும் இருக்கவேண்டும் என்கின்ற எங்கள் நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. இனி இருக்கப்போவதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

அண்மையில் மத்திய அரசு தொலைக்காட்சியில் தமிழ்மொழி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும் நேரத்தை மாற்றி, இந்திமொழி நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இதனால் தமிழக மக்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள் என்பது மட்டுமில்லை கட்டாயமாக நம்மீது இந்தியைத் திணிக்க மீண்டும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கருதி தமிழகம் முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. தமிழக மக்களின் உணர்வுகளே எங்கள் உணர்வுகள் என்ற நிலையில் அந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அவற்றை மத்திய அரசுக்கு தெரிவிக்கும் முகத்தான் ஒரு தீர்மானத்தை இந்தப் பேரவையில் நிறைவேற்றுவது இந்த அரசின் கடமை எனக் கருதி கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன் :